ALPHA MIND POWER

# NEWSLETTER



July
2017

## *From Guruji's desk....*



My Dear Alpha Siddha,

Writing to you with a lot of blessings and love.

25th June 2017 has become an unforgettable day in my life. I had the great opportunity to visit Mount Kailash and Manasarovar lake. The journey was long, the wait was tiresome as the flight could not take off due to climatic conditions. The oxygen level was low and hence energy level in the body was also low.

But, beyond all this, the first darshan of Kailash was something nobody can forget in life. Standing there at around 11.30 am we were all mesmerised by the sight of the towering snow covered mountain. We had seen many such mountains in the last 3 days during our travel. But Kailash was unique. This peak was by itself. It seemed to loom up on its own, just like a Shivling. There were no peaks close to it. The energy exuded by this mountain, or shall I call it Shivling, was so much that even from a great distance I could feel something breaking within me. Some barriers were breaking. Tears started flowing. I had to let myself cry. There was no way I could control myself.

At last, I was there, just in front of the Almighty, my Shiva. Nothing could stop that realisation. Nothing could stop my union with Him. Nothing could stop what was happening within me.

Some cried. Some prostrated. Some meditated. Some were busy taking pictures. I did all the first three and then after a while slowly felt the calmness descending on me. It was a profound experience. I had believed that the search that had begun many years ago within me had ended. But that day I understood that the search was still incomplete. Only on that day and at that place did it really end. Life seemed to be absolutely complete and perfect. The stillness that I felt within me was loud.

After this, we got back into the bus and continued our parikrama around Lake Manasarovar. There was a lady who asked a question to the organiser Mr. Srinivasan. "We have been seeing so many snow covered mountains in the past few days. How do we know that this particular mountain is Mount Kailash?"

I was a bit shocked by this question. The gentleman just sat silently wondering how to answer this question. I could not contain myself. I asked that lady " Yes amma. We have been seeing many mountains and we felt that they are all very beautiful. Nothing more. Do you agree?". She said yes. "But, when we stood there in front of Kailash, did you feel anything?"

She thought for a moment. "Yes, I felt something in my chest", she said. "Well, that is it. That is what tells us this is Kailash". She seemed to be satisfied.

And that is the difference. When you connect with higher energies you experience the energy. You do not need anyone to explain to you. But when the mind is still questioning, the experience is lost.

It is the same with Alpha. When you bow down mentally and connect with higher energies and begin the meditation, you know that you are in Alpha. But if the mind continues to question, the experience is lost. Hence, first strive to make your Alpha experience blissful. Then go for your goals.

Wishing you wonderful meditations,
Blessings,



**Srimatha**



Guruji near Mount Kailash



Guruji near Manasarovar Lake

என் அன்புள்ள ஆல்ஃபா சித்தர்களே,

மிகுந்த அன்புடன் ஆசீர்வாதங்களுடன் எழுதுகிறேன்.

25 ஜூன் 2017 என் வாழ்வில் மறக்க முடியாத நாளாகி விட்டது. கைலாஷ் மற்றும் மானசரோவரை தரிசிக்கும் மிக அரிய வாய்ப்பு கிடைத்தது. பயணம் நீண்டதாக இருந்தது. மேகம் காரணமாக விமான பயணம் தாமதமானது. எல்லோருமே சற்று அசதியாக இருந்தினர். காற்றில் ஆக்ஸிஜன் குறைவாக இருந்ததால் உடலில் தெம்பும் குறைவாகவே இருந்தது.

ஆனால் இதையெல்லாம் தாண்டி கைலாஷ் முதல் தரிசனம் என்பது வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் என்பதில் சந்தேகமே இல்லை. பகல் 11.30 மணி அளவில் அந்த விண்ணுயர்ந்த பனி மூடிய மலையை பார்த்து வியந்து நின்றோம். மூன்று நாட்களாக எங்கள் பயணத்தின் பொழுது பனி மூடிய மலைகள் பலவற்றை பார்த்து வந்தோம் என்பது உண்மை. ஆனால் கைலாய மலை என்பது வேறு. அது தனித்து நின்றது. ஒரு சிவலிங்கமாகவே உயர்ந்து நின்றது. அதன் அருகில் மலைகள் எதுவும் இல்லை. அந்த மலை, இல்லை, அந்த சிவலிங்கத்தினிடமிருந்து வந்த சக்தி மிக அற்புதமானது. அவ்வளவு தூரத்தில் இருந்து வந்தாலும் அந்த சக்தியினால் எனக்குள் ஏதோ ஒன்று சுக்கல் சுக்கலாக உடைந்து போவதை உணர முடிந்தது. சில தடைகள் உடைவதும் தெரிந்தது. கண்களில் கண்ணீர் பெருகியது. அதை என்னால் நிறுத்தவே முடியவில்லை.

வாழ்வில் அத்தனையும் கடந்து ஒரு வழியாக நான் என் சிவன் முன்னால் நிற்கிறேன். அந்த உணர்வு மிகப் பெரிதாக உருவெடுத்தது. எனக்குள் உணர்ந்த அந்த நெகிழ்வை அவனுடன் கலந்து விட்டோமோ என்ற உணர்வை எதுவுமே தடுக்க முடியவில்லை.

சிலர் அழுதனர். சிலர் விழுந்து கும்பிட்டனர். சிலர் தியானம் செய்தனர். வேறு சிலர் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தனர். முதல் மூன்று விஷயங்களையும் நான் செய்தேன். மெல்ல மெல்ல ஒரு அமைதி எனக்குள் இறங்கியது. ஆழ்ந்த ஒரு அனுபவம் அது. எனக்குள் பல வருடங்களாக தொடர்ந்த தேடல் என்றோ முடிவடைந்தது என்று நினைத்திருந்தேன். ஆனால் அன்று தான் புரிந்தது. அந்த தேடல் முடிவடையவில்லை என்பது. அன்று தான் அங்கு தான் அந்த தேடல் முடிவுக்கு வந்தது. மனம் நிறைந்து விட்டது. வாழ்க்கையே முழுமை பெற்று விட்டது போல் உணர்ந்தேன். எனக்குள் உணர்ந்த அமைதி மிக சப்தமாக கேட்டது.

அதன் பிறகு மீண்டும் பஸ்ஸில் ஏறி மானசரோவரை சுற்றி வந்தோம். அந்த குழுவை அழைத்து வந்த திரு ஸ்ரீனிவாசனிடம் ஒரு பெண்மணி கேட்டார் "கடந்த சில நாட்களாக எத்தனையோ பனி மூடிய மலைகளை பார்த்துக் கொண்டே வந்திருக்கிறோம். இந்த மலை தான் கைலாச மலை என்று நமக்கு எப்படி தெரியும் ?"

அந்த கேள்வியை கேட்டு எனக்கு சற்று அதிர்ச்சியாகவே இருந்தது. இதற்கு எப்படி பதில் சொல்வது என்ற யோசனையில் அந்த நல்ல மனிதர் ஆழ்ந்திருந்தார். என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. அவரிடம் கேட்டேன். "ஆமாம் அம்மா. பல மலைகளை பார்த்தோம். அத்தனையும் மிக அழகாக இருப்பதை உணர்ந்தோம். வேறு எதுவும் தோன்றவில்லை. சரிதானா?" அவர் ஒப்புக் கொண்டார். "ஆனால் அங்கு கைலாய மலைக்கு எதிரில் நாம் நின்ற பொழுது ஏதேனும் உணர்ந்தீர்களா?"

சற்று நேரம் சிந்தித்தார். "ஆமாம், என் நெஞ்சில் ஏதோ உணர்ந்தேன்" என்றார். "அதுதான் அம்மா. இது தான் கைலாய மலை என்பதை அந்த உணர்வு தான் நமக்கு உணர்த்துகிறது". அவர் புரிந்து கொண்டு திருப்தியடைந்தார்.

அது தான் வித்தியாசம். உயர்ந்த சக்திகளுடன் தொடர்பு கொள்ளும் பொழுது நம்மால் அந்த சக்தியை உணர முடியும். யாரும் அதை நமக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் மனம் கேள்விகளையே கேட்டுக் கொண்டு இருக்கும் பொழுது அந்த அனுபவம் கிடைக்காமல் போய் விடுகிறது.

ஆல்ஃபாவிலும் அப்படித்தான். சிரம் தாழ்த்தி உயர்ந்த சக்திகளுடன் தொடர்பு கொண்டு தியானத்தை துவங்கும் பொழுது உடனடியாகவே ஆல்ஃபா நிலைக்கு சென்று விடுவதை உணர முடியும். ஆனால் மனம் கேள்விகளுடனேயே இருக்கும் பொழுது அந்த அனுபவம் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆக, முதலில் ஆல்ஃபா நிலையை அனுபவிக்க பழகுங்கள். பிறகு இலட்சியங்களை நோக்கி செல்லுங்கள்.

உங்கள் தியானங்கள் சிறக்கட்டும்.
ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**



Guruji with Alpha Siddhas at
Psychic Energy Workshop in Chennai



Guruji with Alpha Siddhas at
Spiritual Counseling workshop in Chennai

My neighbour used to shout a lot at her family and make a lot of noise while working in the kitchen. It was disturbing us a lot. I started talking to her subconscious mind asking her to keep calm. Now she has become calm. Talking to the subconscious mind definitely works with some patience and faith." Thank you guruji, thanks to alpha mind power"

***Vinaya - Bangalore***

When I first attended Alpha class about a year back, my family was in a very bad state. Nothing was going right. We kept fighting with each other. Money got stuck everywhere. Electronic gadgets were always in repair. There was no happiness at all. As I attended the higher levels, particularly, Psychic Energy, I understood that the energy of my house had to improve. As Guruji says, the base for everything is the energy. I used all the methods taught by Guruji. I kept Alpha Energy Box in my house. I used the herbal powder. Today I can proudly say that my house is full of positive energy. The relationships are very smooth. Really, Guruji has saved my family. Thanks Guruji, Thanks Alpha!

***Meena, Chennai.***

I had a good job, a good husband, a good family, everything that a woman could ask for. But somehow I was always sad. I could not find the reason for this. I attended AMP class and started practicing. There was some improvement. Still, I felt that my mind set had to change even more. I wanted to be a really cheerful person. Then, I took Alpha Music Therapy from Guruji. I did only 3 sessions. I could not believe it. My mind started thinking very differently. I was happy for no reason. My husband and children were very quick to notice this change and they are all happy. Thanks to Guruji for giving us such simple methods to change our lives***!*** ***Shakshi, Coimbatore***

Ten years back when my mother introduced me to Alpha, I came to the class very reluctantly. I was in my 10th Standard and did not really want to sit and meditate. But, after level 1, I started meditating on and off and used the Alpha Mudra to get through my studies. It really helped me. I remembered everything that Guruji spoke in the class. It helped me in different stages of life. Today, after ten years, I am able to balance the roles of a working woman, wife, mother, daughter in law etc. very easily with Alpha. I recently attended level 2 and it was a great blessing to see Guruji in person again. Thanks very much for enlightening me at the right time.

***Lakshana, Chennai.***




எனது பக்கத்து வீட்டில் இருந்த பெண்மணி எப்பொழுதும் மிகவும் சத்தமாக தனது வீட்டில் இருந்தவர்களிடம் பேசுவார். கிச்சனிலும் சத்தமாக பாத்திரங்களை போட்டு உடைப்பார். இது எங்களுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. நான் அவரது ஆழ்மனதுடன் பேசத் துவங்கினேன். அமைதியாக இருக்கும்படி சொன்னேன். இப்பொழுது அவர் மிகவும் அமைதியாக இருக்கிறார். ஆழ்மனதுடன் பேசுவது நிச்சயம் பலனளிக்கிறது. பொறுமையும் நம்பிக்கையும் தான் தேவை. நன்றி குருஜி நன்றி ஆல்ஃபா ! **வினயா, பெங்களூர்**

ஒரு வருடம் முன்னர் நான் ஆல்ஃபா வகுப்பில் கலந்து கொண்ட பொழுது எனது குடும்பமே மிக மோசமான நிலையில் இருந்தது. எதுவுமே சரியில்லை. ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக் கொண்டே இருந்தோம். எங்கள் பணம் பல இடங்களில் மாட்டிக் கொண்டது. வீட்டில் இருந்த எலக்ட்ரானிக் பொருட்கள் எல்லாம் எப்பொழுதும் பழுதாகி விடும். சந்தோஷம் என்பதே இல்லை. உயர் வகுப்புகளில் குறிப்பாக சைக்கிக் எனர்ஜி வகுப்பில் கலந்து கொண்ட பொழுது தான் எனக்கு புரிந்தது எங்கள் வீட்டின் சக்தி சரியில்லை என்பது. குருஜி சொல்வது போல் எல்லாவற்றுக்கும் காரணம் அந்த இடத்தில் உள்ள சக்தி தான். குருஜி சொல்லிக் கொடுத்த எல்லா விஷயங்களையும் கற்று பழகினேன். எனது வீட்டில் ஆல்ஃபா சக்தி பெட்டி வைத்தேன். மூலிகை பொடி பயன்படுத்தினேன். இன்று என்னால் பெருமையுடன் சொல்ல முடியும் எனது வீட்டில் நல்ல சக்தி மிகுந்து இருக்கிறது. உறவுகள் சுமுகமாக இருக்கின்றன. உண்மையாகவே குருஜி எங்களது குடும்பத்தை காப்பாற்றி விட்டார். நன்றி குருஜி! நன்றி ஆல்ஃபா!

**மீனா, சென்னை**

என்னிடம் ஒரு பெண்ணுக்கு வேண்டிய அனைத்தும் இருந்தன. நல்ல வேலை, நல்ல கணவர், நல்ல குடும்பம். ஆனால் ஏனோ எப்பொழுதும் நான் சோகமாகவே இருந்தேன். இதற்கு காரணம் புரியவில்லை. AMP வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி செய்தேன். கொஞ்சம் முன்னேற்றம் தெரிந்தது. ஆனால் என் மனம் இன்னும் மாற வேண்டும் என்று எனக்கு தோன்றியது. சந்தோஷமான மனுஷியாக இருக்க விரும்பினேன். குருஜியிடம் ஆல்ஃபா மியுசிக் தெரபி எடுத்துக் கொண்டேன். 3 முறை தான் அதை கேட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. என் மனம் வித்தியாசமாக சிந்திக்க ஆரம்பித்து விட்டது. காரணமே இல்லாமல் நான் சந்தோஷமாக இருந்தேன். எனது கணவரும் குழந்தைகளும் இந்த மாற்றத்தை மிக விரைவாக கண்டு பிடித்து விட்டார்கள். எல்லோரும் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறார்கள். நமது வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள இவ்வளவு எளிய வழிமுறைகளை அளித்த குருஜிக்கு மிக்க நன்றி! **சாக்ஷி, கோவை**

பத்து வருடங்களுக்கு முன் எனது தாய் என்னை ஆல்ஃபா வகுப்பிற்கு அறிமுகம் செய்து வைத்த பொழுது வேண்டா வெறுப்பாகவே வந்தேன். அப்பொழுது நான் 10ம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தேன். தியானம் செய்யும் எண்ணமே இல்லாமல் இருந்தேன். ஆனால் கட்டம் 1ல் கலந்து கொண்ட பிறகு அவ்வப்பொழுது தியானம் செய்தேன். படிப்பதற்கு ஆல்ஃபா முத்திரை பயன்படுத்திக் கொண்டேன். அது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. குருஜி வகுப்பில் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் நான் மறக்காமல் மனதில் பதித்து வைத்திருந்தேன். எனது வாழ்க்கையில் பல நேரங்களில் எனக்கு அது உதவியது. இன்று, 10 வருடங்கள் கழித்து நான் ஒரு வேலைக்கு போகும் பெண்ணாக, மனைவியாக, தாயாக, மருமகளாக எனது பல அவதாரங்களை ஆல்ஃபாவின் உதவியுடன் தான் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிகிறது. சமீபத்தில் கட்டம் 2ல் கலந்து கொண்டேன். குருஜியை மீண்டும் நேரில் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. சரியான நேரத்தில் எனக்கு தெளிவை தந்த குருஜிக்கு நன்றி

**லக்ஷணா, சென்னை**

*Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!*

**MAKKAL TV**

Saturday 9:00 AM

**POTHIGAI TV**

Monday 1:30 PM

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/

## AMP Classes Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Trichy (Tamil) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 06/07/17<br>07/07/17<br>08/07/17<br>09/07/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, 3/14, McDonalds Road, Trichy |
| Malaysia (English) | Level – 1 | 16/07/17 | Sun | 9am to 5pm | Holiday Inn Hotel Kuala Lumpur Glenmarie, Malaysia. |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 20/07/17<br>21/07/17<br>22/07/17<br>23/07/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | Level – 2<br>Level – 3<br>Siddha Kundalini<br>Psychic Energy<br>Level – 1 | 26/07/17<br>27/07/17<br>28/07/17<br>29/07/17<br>30/07/17 | Wed<br>Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*